**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 02.03.2026**
**OS. No. 56/2017**
**வழக்கு சாட்சி DW.2–காமேஸ்வரன், த/பெ.தத்துவஞானம்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>2 முதல் 4 **பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

1) நான் இவ்வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வழங்கப்பட்டதா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி உஷாராணி என் மனைவி ஆவார். வாதி முனுசாமி எங்களுக்கு தாய் மாமன் ஆவார். அவர் தாவா சொத்து தன்னுடையது என்று விளம்புகை செய்ய சொல்லி தாவா சொத்தின் பெயரில் என் மனைவிக்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்யும்படியும் பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எங்களுக்கு பட்டா வழங்கப்பட்ட சொத்தானது நவப்பட்டி கிராமம், வார்டு B, T.S.No.30 மற்றும் 31 ஆகும். எங்கள் சொத்தானது மொத்தம் 2–1/2 செண்ட் ஆகும். எங்கள் வீட்டின் கதவு எண்.23 ஏ ஆகும்.

2) எங்கள் சொத்தின் சக்குபந்தி விவரங்கள் தெற்குபக்கம் நகராட்சி ரோடு, வடக்கு பக்கம் சகுந்தலா (லட்சுமணனின் மகள்) என்பவரின் வீடு, மேற்குபக்கம் நெடுஞ்சாலை துறை பவானி மெயின் ரோடு, கிழக்கு பக்கம் விஜயானந்த் என்பவரின்வீடு ஆகும். எங்கள் சொத்தானது எங்கள் தாயாருக்கு என் தாத்தா லட்சுமண கவுண்டர் வாய்மொழியாக கொடுத்துவிட்டார், அதற்கு தான் நாங்கள் பட்டா பெற்று அனுபவத்தில் உள்ளோம். 2 முதல் 4 பிரதிவாதிகளை பொறுத்தவரை ஒரு சொத்திற்கு பட்டா வழங்கவேண்டும் என்றால் அனுபவம் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் தான் பட்டா வழங்குவார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கிலும் அதன் அடிப்படையில் தான் என் மனைவி பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கை

பொறுத்தவரையில் எங்களுக்கும், வாதி முனுசாமிக்கும் உள்ள தனிப்பட்ட பிரச்சனையின் காரணமாகத்தான் என்றும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் எங்களுக்கும் தனிப்பட்ட பிரச்சனை எதுவும் இல்லை என்றால் சரிதான்.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.